**<u>Date : 03</u>.03.2026**

**SC.No.75/2025**

**P.W. 7 திரு.** அன்பழகன்

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்)

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

1. ஆய்வாளர் என்னை எந்த வகையில் அழைத்தார். நேரடியாக வந்து அழைத்தாரா, ஆள் அனுப்பி அழைத்தாரா அல்லது தொலைபேசியில் அழைத்தாரா என்ற விபரத்தை நான் ஆய்வாளர் விசாரணை குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் அவர்கள் நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் அழைக்கவில்லை என்பதால் தான் அவர் எந்த முறையில் அழைத்தார் என்ற விவரத்தை நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

2. எந்த இடத்தில் நான் இருக்கும்போது ஆய்வாளர் என்னை அழைத்தார் என்ற விவரத்தையும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் இறந்து போனதாக சொல்லும் சஞ்சீவிகுமார் நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். பார்த்தசாரதி என்ற நபரையும் நான் இந்த வழக்கிற்கு முன்பு பார்த்ததில்லை என்றால் சரிதான். பார்த்தசாரதியின் வீடு எந்த தெருவில் அமைந்துள்ளது என்ற விபரமோ, அவரது கதவு எண் என்ன என்ற விவரமோ நான் தெரிந்து கொண்டேனா என்றால் வழக்கிற்கு முன்னால் எனக்கு அது பற்றி தெரியாது.

3. கண்டமனூர் பெயர் தான் வள்ளல் நதி. எதிரி கைது செய்யப்பட்டதாக சொல்லக்கூடிய இடத்திற்கு நான் முன்னாள் ஆய்வாளர் முன்னாள் வந்தாரா என்றால் ஆய்வாளர் தான் முதலில் சென்றார், அதற்கு பின்னர் நாங்கள் அதற்கு பின்னால் சென்றோம். கைது செய்யப்பட்டதாக சொல்லும் இடத்திற்கு ஆய்வாளர் எப்போது சென்றார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் அந்த இடத்திற்கு போகும்போது ஆய்வாளருடன் பார்த்தசாரதி

இருந்தாரா என்றால் இருந்தார். பார்த்தசாரதி அந்த இடத்திற்கு எத்தனை மணிக்கு வந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

4. பார்த்தசாரதி வீடு அமைந்துள்ள தெரு பெயரோ, நம்பரோ எனக்கு எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்ன விபரங்களான சட்டை, பேண்ட், கத்தி இவற்றை மட்டும் கைப்பற்றியதாக ஆய்வாளர் விசாரணையில் சொல்லியுள்ளேன்.ஆய்வாளர் என்னை விசாரணை செய்யும் போது எதிரியின் வீட்டில் சட்டை, பேண்ட் ஆகியவைகளை குறிப்பிட்டுச் சொல்லி விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் என் முன்னிலையில் வாக்குமூலம் வாங்கி அதன் பிறகு அத்தாட்சி கைப்பற்றினார்கள், அந்த விபரத்தை சொல்லியுள்ளேன்.

5. உடைகள் என்பது ஒரு நபர் அணியும் எல்லா உடைகளையும் சொல்லும் என்றால் சரிதான். என் முன்னிலையில் எதிரியின் வீட்டில் எதிரி எந்தவிதமான சட்டை, பேண்ட், கத்தி எடுத்து ஆஜர் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் முன்னிலையில் சட்டை, பேண்ட் கைப்பற்ற வில்லை என்பதால் தான் சட்டை, பேண்ட் கைப்பற்றப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லாமல் பொதுப்படையான வார்த்தையான உடைகளை கைப்பற்றியதாக பொதுவாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

6. இரண்டு செல்போன் மற்றும் நான்கு சிம்கார்டுகள் கைப்பற்றப்பட்டது செல்போனை போலீசார் கழட்டி பார்த்தார்களா என்றால் கழட்டி பார்த்தார்கள் செல்போன் எண் எனக்கு தெரியாது. சிம்கார்டு எண் எனக்கு தெரியாது. செல்போன் நம்பர், சிம்கார்டு எண்ணும் செல்போன் எண்ணும் எனக்கு தெரியாது என்ற காரணத்தினால் என் முன்னிலையில் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. போலீசார் எழுதி கைப்பற்றியதை குறித்துக் கொண்டார்கள், என் முன்னிலையில் தான் அவை எழுதப்பட்டது.

7. கைப்பற்றியதாக சொல்லக்கூடிய இடத்தில் செல்போன்களோ வேறு பொருள்கள் எதுவும் கைப்பற்றவில்லை என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தின்

அடிப்படையில் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்லக்கூடிய இரு அத்தாட்சிகள் காவல் நிலையத்தில் வைத்து தான் அவை தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரி கைது செய்யப்பட்டதாக சொல்லக்கூடிய இடத்திற்கு நான் செல்லவே இல்லை என்றால் சரியல்ல.

8. எதிரியின் வீட்டிற்கு காவல் துறையினருடன் நான் செல்லவில்லை என்பதால் தான் எதிரியினுடைய வீடு எந்த தெருவில் உள்ளது என்றும், எந்த கதவு என்றும், ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.. நான் அந்த ஊரின் கிராம நிர்வாக அதிகாரியாக இருப்பதால் எதிரியின் வீடு மற்றும் தெருப் பெயரும் எனக்குத் தெரிந்திருக்கும் என்றும், அந்த இடத்திற்கு நான் செல்லவில்லை என்பதால் தான் தெரு மற்றும் கதவு எண்ணை ஆய்வாளரிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

9. நான் சொன்ன மாதிரி சான்று பொருட்கள் அனைத்தும் நான் சொன்ன நேரத்தில் அத்தாட்சியின் அடிப்படையில் கைப்பற்றப்படவில்லை என்றும், அவை பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அரசு பணியில் நான் பணியாற்றுவதால் காவல்துறையினருக்கு கட்டுப்பட்டு உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மூவ்மெண்ட் பதிவேடு கிராம நிர்வாக அலுவலர்களுக்கு கிடையாது.

**மறுவிசாரணை – இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.03.03 17:50:49 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.